# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 31 ஞாயிற்றுக்கிழமை (14.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 146



ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து


# மாணவர் பேரவை அலுவலகம் நள்ளிரவில் தீயிடப்பட்டது!

## பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

பரமேஸ்வராச் சந்தியில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் நேற்று முன்தினம் நள்ளிரவு தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் தமது நிறுவனத்திற்குள் மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினர் அங்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை தீயிட்டுக் கொளுத்தியுள்ளதாக மாணவர் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தில் 40 கணனிகள், ஒரு மில்லியன் பெறுமதியான உடைமைகள் சேதமாக்கப்பட்டும் களவாடப்பட்டும் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் அலுவலகத்தையும் தீயிட்டுள்ளனர். மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த படையினர் உள்நுழைந்து தீயிட்டு எரிக்க வெளியே பல நூற்றுக் கணக்கான படையினர் சுற்றி நின்றுள்ளனர்.

இது கல்விச் சமூகத்திற்கு விடப்பட்ட பாரிய சவாலாகும். மிக கேவலமான படையினரின் இச் செயலினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

குடாநாட்டில் மாணவர் பாரிய கல்விச் சேவையினை நாம் செய்து வருவதனை பொறுக்க முடியாத படையினர் பல தடவைகள் எமது அலுவலகத்திற்குள் உள்நுழைந்து தாக்கியமை தெரிந்ததே என மாணவர் பேரவைவெளி (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 இளைஞர்கள் கைது

அம்பாந்தோட்டை நகரில் 14 இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நகரின் பொலிஸ் வீதிச்சோதனைச்சாவடியில் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக அம்பாந்தோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் 20-24 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாடு செல்லும் நோக்கோடு இவர்கள் கொழும்பில் விடுதிகளில் தற்காலிகமாக தங்கியிருந்து வருவதாகவும் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான அடையாள அட்டைகள் இவர்களிடம் உள்ளபோதும் அவற்றின் உண்மைத்தன்மையை அறிந்து (08 ஆம் பக்கம் பார்க்க)

# க.கா.குழுவின் கடற் கண்காணிப்பு தற்காலிகமாக இடை நிறுத்தம்

## நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் கடலில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.**

**தரைப் பகுதியில் தமது கண்காணிப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் எனவும் கண்காணிப்புக் குழுவின் பதில் பேச்சாளர் றொபேட் நெல்சன் தெரிவித்துள்ளார்.** **(08 ஆம் பக்கம் பார்க்க)**

## அல்லைப்பிட்டியில் நேற்றிரவு கடற்படை துப்பாக்கிச் சூடு

### நால்வர் உயிரிழப்பு?

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி தெற்குப் பகுதியில் நேற்றிரவு 9மணியளவில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அப்பாவிப் பொதுமக்கள் நால்வர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் அதன் பின்னர் கடற்படையினர் சுட்டதில் இவர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை. இதேவேளை இச் சம்பவத்தினையடுத்து செல்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அது கடை ஒன்றின் மேல் விழுந்து வெடித்ததில் மூவர் படுகாயமடைந்ததாகவும் கூறப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.மோகனாம்பிகை (வயது 46), எஸ்.சிவநேசன் (வயது 46), வி.செல்லத்துரை (வயது 61) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

அவர்கள் உடனடியாக யாழ்.போதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதேவேளை இவர்கள் மூவரையும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது அல்லைப்பிட்டி கடற்படையினர் அவர்களை மேலே செல்ல அனுமதிக் கவில்லை. இதனையடுத்து கிறிஸ்தவ பாதிரியார் உதவியுடன் அவர்கள் யாழ். போதனாவைத்தியசாலை வந்தடைந்தனர்.

அவர்கள் மூவரும் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கடற்படையினர் மற்றும் பொலிஸார் தமக்கு எதுவும் தெரியாது எனக்கூறினர். (ச-05)

## துப்பாக்கித் தாக்குதலில் சிப்பாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை விதானையார் வீதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கித் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் உயிரிழந்தார்.

வீதியால் ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவரை மறித்து சோதனை இட முயன்றபோது அவர்கள் சிப்பாயை சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவர் யூ.ஏ.டி.திஸ நாயக்க (வயது 26) என தெரிவிக்கப்பட்டது. (ச-15,133)

## இன்று யாழில் பூரண ஹர்த்தால்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகமும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனின் அலுவலகமும் இராணுவத்தினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான அழைப்பை யாழ்.மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் விடுத்துள்ளது. யாழ்ப்பாணம் பொது நூலகத்தை 1982 ஆம் ஆண்டு தீயிட்ட கைக்கூலிகள் நேற்று முன்தினம் மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு செயற்படும் தொண்டு நிறுவனமான சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மீது தமது காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டியுள்ளனர்.

இது கல்விச் சமூகத்திற்கு விடப்பட்ட பெரும் சவாலாகும். பல்கலைக்கழக மாணவர்களையும் பாடசாலை மாணவர்களையும் கைது செய்து சித்திரவதை செய்யும் படையினர் மாணவர்களை தொகைவகையாக படுகொலை செய்யவும் திட்டமிட்டு வருகின்றனர்.

எனவே படையினரின் செயற்பாட்டைக் கண்டித்து இன்று இடம்பெறும் கதவடைப்புப் போராட்டத்திற்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறும் அவ் அமைப்பு கோரியுள்ளது (ச)

## துப்பாக்கிச் சூட்டில் தந்தையும் மகளும் காயம்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் தந்தையும் மகளும் படுகாயமடைந்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் சுந்தரலிங்கம் (வயது 55) அவரது மகள் ஜெயராணி (வயது 27) ஆகிய இருவருமே துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானவர்களாவர்.

அவர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் நேற்று யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-15)

# சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக நியமனம் பெற்றவர்களின் விபரம்

சுகாதார தொண்டர்களில் 101 பேர் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் யாவருக்குமான நியமனக்கடிதம் நாளை திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே தவறாது குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் சமூகமளித்து கடிதத்தினை பெற்று, வேண்டிய அறிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். சுகாதரா சேவைகள் பிரதி மாகாண பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

சுகாதார தொண்டர்களிலிருந்து சுத்திகரிப்புக்கு தொழிலாளர்களாக நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

திருமதி. கஜேந்திரன் ராஜகுமாரி சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். திருமதி. அகிலேஸ்வரி ஜெயந்திதேவி சிவகுரு வீதி, ஏழாலைமத்தி சுன்னாகம். திருமதி. சபாபதி தாசன் விமலறஜனி வட்டாரம் 10, நெடுந்தீவு. கந்தையா ஜெயராணி மீசாலை வடக்கு, கொடிகாமம். திருமதி. ஆனந்தராசா தேவலோகராணி மந்துவில் கிழக்கு, கொடிகாமம். திருமதி. சக்திவேல் உதயராணி, நாகலிங்கம் முத்தையா வீதி, பருத்தித்துறை.

ஆறுமுகம் ஜீவனாந்தி ஆஸ்பத்திரி வீதி, மூளாய், சுழிபுரம். திருமதி. ஜெயசுதன் ஜுலிமேரி நெடுந்தீவு மத்தி. குமாரசாமி செல்வனந்தி வட்டாரம் 2, நெடுந்தீவு. திருமதி. சுசந்தா பிறேம்லால் சசிறஞ்சினி தம்மாலை, அளவெட்டி மேற்கு அளவெட்டி. சின்னராசா மாலினி கோப்பாய் தெற்கு உரும்பிராய். குகதாசன் மஞ்சுளா முத்தலாய்குளி, கரவெட்டி தெற்கு கரவெட்டி. திருமதி சிவச்செல்வம் பிறேமினி லட்சுமி இல்லம், வியாபாரி மூலை பருத்தித்துறை.

செல்வன் தனேஸ்வரிபாலசிட்டி, பண்டத்தரிப்பு. மதியாபரணம் ஜெகவதனி பிள்ளையார் கோவிலடி, வட்டாரம் 4, நெடுந்தீவு. திருமதி ஜெகரூபன் பவானந்தி மருதங்கேணி தெற்கு தாளையடி. திருமதி மகேந்திரராஜா செல்வகுமாரி உடுத்துறை வடக்கு தாளையடி. திருமதி பிரபாகரன் பாமினி கிராமியவளவு, தும்பளை மேற்கு பருத்தித்துறை. நிக்கிராஸ மனிஸ்டலா மணற்காடு குடத்தனை. கதிரவேற்பிள்ளை சுந்தர காந்திதுன்னாலைவடக்குகரவெட்டி.

சிங்கநாயகம் அன்பிலஸ் சுகந்தி சென்.மரியாள் வீதி, பண்டத்தரிப்பு. திருமதி சுந்தரபாலன் மதிவேணி மத்திய வீதி, தெல்லிப்பளை. அப்பையா மதிரஜனி கரம்பகம் மிருசுவில். திருமதி அகிலன் நளாயினி வட்டராம் 3, அனலைதீவு. திருமதி சுப்பிரமணியம்புஸ்பராணி வேலனை மேற்கு, வேலணை. திருமதி ஆலசுந்தரம் சுமதி கரணவாய் கிழக்கு, கரவெட்டி. குருநாதபிள்ளை நிரஞ்சினி 4 ஆம் கட்டை ஆணைக்கோட்டை.

சங்கரப்பிள்ளை சசிகலா தெல்லிப்பளை கிழக்கு தெல்லிப்பளை. இராஜகுமார சுபேஜினி கோணபுலம் மல்லாகம். வல்லிபுரம் உதயராணி மந்துவில் வடக்கு கொடிகாமம். திருமதி பிரபாகரன் மதிவதனி மார்க்கபுர கோப்பாய் வடக்கு. பெரியான் விமலராணி புத்தூர் கிழக்கு புத்தூர். கோபாலகிருஷ்ணன் விஜிதா காளிகோவிலடி உடுவில். நல்லையா உதய ரஞ்சிதா ஏழாலை தெற்கு மயிலங்காடு. தருமரட்னம் செல்வநாயகி 5ஆம் வட்டாரம் எழுவைதீவு.

திருமதி தனபாலசுந்தரம் ஜெயவதனி 3ஆம் வட்டாரம் அனலைதீவு. இராசையா கோமதி நீர்வேலி வடக்கு பன்னாலை. திருமதி கதிர்காமநாதன் துசியந்தினி மாதனை கரவெட்டி தெற்கு கரவெட்டி. கந்தசாமி கமலாஜினி கன்போலை வீதி கரவெட்டி மேற்கு கரவெட்டி. கந்தையா ரேவதி செம்பியன்பற்று தாளையடி. நாமுத்து சிவந்தினி தாவடி தெற்கு பத்திரகாளி கோவிலடி கொக்குவில்.

கந்தசாமி ஜெயசுதர்சினி தாபற்றிப்புலம் தெல்லிப் பளை, திருமதி இராஜரட்ணம் ரஞ்சினி வீரவானி புத்தூர் கிழக்கு. திருமதி இராதாகிருஷ்ணன் பிரேமலி புத்தூர் கிழக்கு கல்லூரடி. பொன்னன் புஸ்பவதி கைதடி தெற்கு கைதடி. கந்தையாசரஸ்வதிசரசாலைதெற்கு சாவகச்சேரி. நவரட்ன ராஜன் பராசக்தி மட்டுவில் வடக்கு சாவகச்சேரி. திருமதி விஜயகுமார் சசிகலா பெரிய நாவலடி சாவகச்சேரி. திருமதி மரியதாஸ் டயானா மாதகல் மேற்கு மாதகல்.

வினாசி மங்கலேஸ்வரி கட்டுவன் மேற்கு தெல்லிப்பளை. கிருஷ்ணசாமி சுகஸ்தி வட்டக்குளத்தடி கட்டப்பிராய் யாழ்ப்பாணம். தவராஜா வலன்டினா. அராலி வீதி சங்கானை. கணபதிப்பிள்ளை சிவாஜினி 7ஆம் கட்டை சண்டிலிப்பாய். சிறிதரன் கஜேந்தினி அம்பனை மேற்கு சுன்னாகம். எம்.நவராஜ் 23/6, 4ஆம் குறுக்குத்தெரு கொழும்பகம். செல்லத்துரை தருமபாமா வரணி வடக்கு வரணி. திருமதி பிரகாசம் நித்தியதிரேசா 10ஆம் வட்டாரம் நெடுந்தீவு.

மஸ்கலஸ் தோமஸ் மரிய கொலஸ்ரிக்கா 6ஆம் வட்டாரம் நெடுந்தீவு. நல்லான் யோகராணி இராஜவில்லா கரவெட்டி மேற்கு கரவெட்டி. தாமோதரம்பிள்ளை யசிந்தா இராஜவில்லா கரவெட்டி மேற்கு கரவெட்டி. தருகாசலம் செல்வராணி முதலியார் கோவிலடி கரவெட்டி மேற்கு கரவெட்டி. பாலச் சந்திரன் சிறிமதி காளிகோவிலடி துணைவி சங்கரத்தை. திருமதி ஜி.சரோஜினி பிரான்பற்று பண்டத்தரிப்பு. திருமதி இராஜேந்திரன் புஸ்பராணி மந்துவில் மேற்கு கொடிகாமம்.

குணதாசன் ஜெயகௌரி கைதடி தெற்கு கைதடி. ஆறுமுகம் ஜெசிகா உசன் மிருசுவில். திருமதி அரியரட்ணம் ரஞ்ஜினி 4ஆம் வட்டாரம் வேலணை கிழக்கு. அகஸ்ரின் மேரி றொசிற்றா 8ஆம் வட்டாரம் நெடுந்தீவு. திருமதி கந்தசாமி ராஜினி தேவி கெகலிவத்தை வீதி நீர்வேலி மத்திநீர்வேலி. நாக முத்து ஜெயந்தகுமாரி ஊச்சில் கரவெட்டி தெற்கு கரவெட்டி. திரு சிவபாத சுந்தரம் ஜெயரூபன் மருதங் கேணி தெற்கு தாளையடி, திருமதி ரி.குணசேகரம் கோப்பாய் தெற்கு கோப்பாய்.

ஆர்.மகேஸ்வரானந்தன் வாதரவத்தை புத்தூர். ஆர். கிருபாகரன் வீரகத்தி பிள்ளையார் கோவிலடி உடுப்பிட்டி. ஆ.கோவந்தினி பார்மணியம் றோட் தெல்லிப்பளை. உதயகுமார் ரஞ்சினிதேவி அல்லாரை தெற்கு மீசாலை. அருன்நாதன் மாலினி கரம்பைக் குறிச்சி மேற்கு வரணி. சரவண முத்து ரூபரஞ்சினி கெருடாவில் சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரி. செல்லத் துரை கவிதாஞ்சலி இடைக்குறிச்சி மேற்கு வரணி. திருமதி மோகன ரூபன் உமாவதி கலைமதி வீதி இமையானன் மேற்கு உடுப்பிட்டி. வீரசிங்கம் வசந்தகுமாரி நாகர் கோவில் தெற்கு நாகர்கோவில். விக்னேஸ்வரன் வினுஷா நெடியகாடு வடக்கு வல்வெட்டித்துறை. மார்க்கண்டு சுபரஞ்சினிபன்னாலை இளவாலை.

செல்லத்துரை செல்வராணி கந்தரோடை மேற்கு சுன்னாகம். சின்னக்குட்டி சுகந்தினி ஈவினை மத்தி புன்னாலைக்கட்டுவன். அண்ணாமலை கலைச்செல்வி தப்பட்டிபுலம் தெல்லிப்பளை. கே.தயானந்தினி கேணியடி கொக்குவில் மேற்கு. நவரட்ணம் ரஞ்சிதமலர் மீசாலை வடக்கு மீசாலை. கந்தையா யமுனாதேவி 3ஆம் வட்டாரம் நெடுந்தீவு. திருமதி. ரிச்சாட் பேக்மன் மேரி யுலேற்றா 10ஆம் வட்டாரம் நெடுந்தீவு. துரைராசா வசந்தினி மாரியம்மன் வீதி கோப்பாய் மத்தி கோப்பாய். திருமதி. தீபகுமார் லோஜினி துன்னாலை கிழக்கு கரவெட்டி. திருமதி. வேல்முருகன் முனிஸ்வரி சுதுமலை தெற்கு சாவற்காடு மானிப்பாய். செல்வராசா பிரேமிலா கோயில்புலம் தெல்லிப்பளை. தனபாலசிங்கம் கனக மணி ஜயநார் கோவிலடி கொடிகாமம். மாசிலாமணி கிறிஸ்ராகரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறை. தில்லியம்பலம் சுகந்தி 1ஆம் வட்டாரம் நயினாதீவு. பத்மநாதன் சுதாகரன் 7 ஆம் வட்டாரம் நயினாதீவு. திருமதி புலேந்திரன் ஜீவிதா அச்செழு நீர்வேலி. சண்முகராஜா சுகந்தினி ஊரெழுமேற்குசுன்னாகம். நாகராசா சுஜாத்தா நெல்லியான் செம்பியன் பற்று தெற்கு தாளையடி. (க)

## இராசி பலன்

**14.05.2006**
**(சித்திரை 31, ஞாயிற்றுக்கிழமை)**
**பிரதமை பிற்பகல் 12.32 மணிவரை**
**அனுசம் முன்னிரவு 10.08 மணிவரை**
**இராகுகாலம் 4.23-5.53 மணிவரை**
**சுபநேரம் 8.53-10.23 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | பிரயாண பயம், பகைவர் தொல்லை, காரியதாமதம், திடீர் நன்மை. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், நல்ல வரவேற்பு, போசனசுகம், தெய்வ சிந்தை. |
| மிதுனம் | சத்துருஜெயம், சுபநிகழ்வு, நல்லமுயற்சி, உற்சாகம். |
| கடகம் | வேலைச்சுமை, பூர்வ புண்ணிய கருமம், அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | மாதாசுகம், மனக்கிலேசம், நண்பர்கள் சந்திப்பு, கல்வியில் ஆர்வம். |
| கன்னி | கூட்டுமுயற்சி, போசனசுகம், தெய்வ சிந்தை, மேன்மை. |
| துலாம் | வீண் வார்த்தை, குடும்பக் கவலை, கற்பனை மிகுதி, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | தெய்வ சிந்தை, புதிய முயற்சி, பிரயாணம், ஜனவசியம். |
| தனுசு | வீண்பகை, முயற்சி தாமதம், பண விரயம், எதிர்பாராத நன்மை. |
| மகரம் | சுபநிகழ்வு, இஷ்டசித்தி, கலந்துரையாடல், போசனசுகம். |
| கும்பம் | தெய்வ சிந்தை, புதிய தகவல், எடுத்த காரியம் கைகூடும், மேன்மை. |
| மீனம் | புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, பிரயாணம், ரோகநிலை. |

- வளவன்

# “சம உரிமையுடன் கூடிய சமாதான பூமி” சர்வதேச சமூகத்திடம் ஈ.பி.டி.பி.கோரிக்கை

தமிழ் பேசும் மக்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில்... அம் மக்களின் மன உணர்வுகளை சரிவரப் புரிந்து கொண்டவர்கள் என்ற நிலையில்... எமது மக்களின் கருத்துக்களை அவர்களுடனான கருத்துப் பரிமாற்றங்களின் ஊடாக நாம் தெரிந்து கொண்டவர்கள் என்ற நிலையில்... மக்களால் நேர்மையான முறையில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில் ... தமிழ் பேசும் மக்கள் சார்பாக ஈ.பி.டி. பியினராகிய நாம், சர்வதேச சமூகத்திடம் விடுவிக்கும் மனிதாபிமான அடிப்படையிலான வேண்டுகோளே.

அமைதி சமாதானம், அரசியலுரிமை இவைகளை அடைய வேண்டிய பாதை ஜனநாயக வழிமுறை யினாலான பேச்சுவார்த்தை மட்டும் என தமிழ் பேசும் மக்கள் தெளிவுடன் இருக்கிறார்கள். என ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அப்பாவிப் பொதுமக்கள் அன்றாடம் உயிரிழந்து, உடைமையிழந்து, நிம்மதியான வாழ்விழந்து, உளவியல் ரீதியாகவும் பாதிப்புக்களை சந்தித்து வருகிறார்கள். அன்றாடம் உடலுழைப்பை விற்கும் தொழிலாளர்கள் உழைப்பை இழக்கின்றனர். மாணவர்கள் கல்வியை இழக்கின்றனர், வர்த்தகர்கள், அரச ஊழியர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகள் சகல தரப்பினரும் இன்று அவலங்களைச் சந்தித்து வருகின்றனர்.

ஒரு புறம் பேச்சு வார்த்தை என்று கூறிக்கொண்டு மறுபுறத்தில் யுத்த நடவடிக்கைகளைத் தொடர்வதென்பது சமாதானம் குறித்த நம்பிக்கையீங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றது. ஆகவே முதலில் சீரான யுத்தநிறுத்த உடன்பாடு குறித்து சர்வதேச சமூகம் கவனம் எடுத்து அதற்கான அழுத்தங்களை கொடுப்பதற்கு முன்வரவேண்டும். ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். சுதந்திரமாகச் செய்தி வெளியிடும் ஊடகங்களிலிருந்து ஊடகவியலாளர்களும், ஊழியர்களும் ஒதுங்கியிருக்கத்தவறும் பட்சத்தில் அதற்கான தண்டனை வழங்கப்படும் என்ற எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே அடுத்த கட்டப்பேச்சுவார்த்தை மேசையில் சர்வதேச சமூகத்தினால் எழுப்பப்படவேண்டிய கேள்விகள் இவைதான். ஏனிந்தப்படுகொலை?... ஏனிந்த எச்சரிக்கைகள்?... ஏனிந்த அச்சுறுத்தல்கள்?...

சர்வதேச சமூகத்தினால் இவைகள் உரத்தக் கேள்வியாக எழுப்பப்படவேண்டும்! படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்கான அழுத்தங்களும் ஏற்படுத்தப்படவேண்டும். தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைக்கான பிரச்சினையினால் யுத்தம் விளைந்தது அரசியலுரிமைக்கான தீர்வு கிடைக்குமேயானால் யுத்தமும் யுத்தத்தினால் விளைந்த அவலங்களும் இயல்பாகவே இல்லாதொழிந்துவிடும்.

ஆகவே படுகொலைகளைத் தடுத்து நிறுத்தி யுத்தநிறுத்தத்தை சரிவரக் கடைப்பிடிக்கின்ற அதே வேளை தமிழ் பேசும் மக்களுக்காக அரசியலுரிமைக்கான பிரச்சினை குறித்து தீர்வும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

அழுத்தத்திற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டியதும் நடைமுறைப்படுத்த வேண்டியதும் சர்வதேச சமூகத்தின் தவிர்க்க முடியாத சமகாலக் கடைமையாகும். போரற்ற வாழ்விற்காக ஏங்கி சீரற்ற வாழ்விற்குள் சிதைந்து போயிருக்கும் தமிழ் பேசும் வாழ்வுரிமையை... தீர்வின்றி இழுபட்டுச் செல்லும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிந்த தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமையை... மனிதப்பிணங்கள் விழாத, மரண ஓலம் கேட்காத, சம உரிமையோடு கூடிய ஒரு சமாதான பூமியை... சர்வதேச சமூகத்திடம் நாம் கோரி நிற்கின்றோம். இக் கோரிக்கைகள் அடுத்த பேச்சு வார்த்தை மேசையில் உரத்த குரலாக எழுப்பப்படும் என்று நம்புகின்றோம். (து)

# குமுதினிப் படுகொலையின் 21ஆவது ஆண்டு நினைவுநாள்

குமுதினிப் படுகொலையின் 21ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை நெடுந்தீவில் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1948ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ஆம் திகதி நடுக்கடலில் வைத்து படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களது நினைவாக மகாவலித்துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவலய வளாகத்தில் குறித்த தினத்தன்று காலை 7.00மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் அப்பகுதியில் நினைவுத்திருப்பலியிலும் நெடுந்தீவு பங்குத்தந்தையினால் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. அன்றைய தினம் காலை 9 மணிக்கு நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை ஆலயத்திலும், பகல் 12 மணிக்கு நெடுந்தீவு மேற்கு நெழுவினிப் பிள்ளையார் ஆலயத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளும் இடைக்கடலில் வைத்து படுகொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களது 21 ஆவது நினைவுதினத்தினை அனைத்து மக்களும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்குமாறும், நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறும் நினைவுதின ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.(க-34)

# வவுனியா, மட்டக்களப்பில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்;

## பேச்சுவார்த்தையின் பின்னரே முடிவெடுக்கப்படுமாம்

(கொழும்பு)

வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள சில உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தலை நடத்துவது தொடர்பில் எதிர்வரும் 16ஆம் திகதி பேச்சுவார்த்தை நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள இப் பேச்சுவார்த்தையில் வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இந்தப் பிரதேசங்களில் நிலவும் பாதுகாப்பு நிலை தொடர்பான அறிக்கையை அவர்கள் தேர்தல் செயலகத்துக்கு வழங்கவுள்ளார்கள்.

இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே பிரதேசத்தில் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வவுனியாவில் இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கும் மட்டக்களப்பில் 3 உள்ளூராட்சி சபைகளுக்கும் எதிர்வரும் 20ஆம் திகதி தேர்தலை நடத்த ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் சில உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இந்த நிலையில் வன்னி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் தேர்தல் நடத்தும் சூழ்நிலை காணப்படவில்லை என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (க-9)

சுன்னாகம்

கதிரமலைச் சிவன் மஹோற்சவம்

1ஆம் நாள்

இன்று கொடியேற்றம்



கொடியேற்றமின்றே

பொடியார் திருமேனிப் பொன்னம் பலவாணா
அடியார்க் கென்றுமே அருள்மழை பொழிவாய்
கொடியேற் றமின்றே குடிகளும் உயருமே
வடிவழ கியாகனே வணங்கினம் என்றுமே



-கலாபூஷணம் சு.துரைசிங்கம்

# தங்களின் பங்களிப்பை ஈழத்தமிழர்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றார்கள்!

## கலைஞர் கருணாநிதிக்கு சந்திரசேகரன் எம்.பி கடிதம்

(கண்டி)

இலங்கை இனப்பிரச்சினையில் தமிழக முதல்வராக பொறுப்பேற்ற கலைஞர் மு.கருணாநிதியின் பங்களிப்பை ஈழத் தமிழர்கள் பெரிதும் எதிர்பார்ப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கலைஞர் கருணாநிதிக்கு பெ.சந்திரசேகரன் அனுப்பியுள்ள வாழ்த்துக் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் வெற்றி முழு உலகத் தமிழர்களையும் உவகைகொள்ள வைத்திருக்கின்றது.

உலகத்தமிழ் மக்களின் கவனத்தை கால்நூற்றாண்டுகளுக்கும் மேலாக கவர்ந்து வந்த தாங்கள் மீண்டும் ஒருமுறை தமிழக அரசாட்சியில் அமர்வது உலகத் தமிழர்களைப் பூரிக்க வைக்கின்றது.

அதிலும் குறிப்பாக ஈழத்தமிழர்களின் பிரச்சினையிலும், இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்களின் பிரச்சினையிலும் எரிந்துகொண்டிருந்த நெருப்பு தங்களின் ஆட்சிக் காலத்தில் தணிந்து ஒரு ஆக்கபூர்வமான முடிவினை எட்டவேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

அனுபவமிக்க அரசியல்வாதியாகவும் அதிசயிக்கத்தக்க சொல்லாற்றலும் பிரமிக்க வைக்கும் எழுத்தாற்றலும் கொண்ட தாங்கள் தமிழின் அடையாளமாக இருக்கின்றீர்கள்.

தாங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது கூட எனது மலையக மக்கள் முன்னணி தங்களுடனான உறவைப் பலப்படுத்தியும் புதுப்பித்துமே வந்துள்ளது.

எனவே இலங்கை இனப்பிரச்சினையில் தங்களுடைய பங்களிப்பை ஈழத்தமிழ் உறவுகள் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

தொடரட்டும் உங்களுடைய அரசியல் பயணம்! வாழ்க உங்களுடைய தமிழ் தொண்டு! உலகத் தமிழர்களின் உன்னத தலைவராக தாங்கள் புது வடிவம் எடுக்க மலையக் மக்கள் முன்னணி வாழ்த்துகின்றது என்றுள்ளது. (சு)

# மட்டுப்படுத்தப்பட்ட குண்டுவீச்சில் புலிகளின் விமானத் தளத்தை கண்டறிந்து விட்டோம்

## அரச சமாதான செயலகம் அறிக்கை

(கொழும்பு)

தமிழர் தாயகப் பகுதிகள் மீது கடந்த வியாழக்கிழமை மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் புலிகளின் விமானத் தளத்தை உறுதி செய்துள்ளோம் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரச சமாதான செயலகம் விடுத்துள்ள அறிக்கையில்;

திருகோணமலையிலிருந்து கடந்த வியாழக்கிழமை விடுமுறையிலிருந்து பணிக்குத் திரும்பிய 710 ஆயுதமேந்தாத கடற்படையினரை காங்கேசன்துறைக்கு ''பேர்ள்ஸ் குரூஸ்'' என்ற கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். அதில் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் கண்காணிப்புக் குழுவினரது கொடியும் இடம் பெற்றிருந்தது.

இக்கப்பலுக்குப் பாதுகாப்பாக கடற்படையின் அதிவேக தாக்குதல் படகுகளும் வந்தன. அப்படகுகள் ஒன்றில் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த ஒருவரும் இடம் பெற்றிருந்தார்.

வெற்றிலைக்கேணி பிரதேசத்தில் 30 கடல் மைல் தொலைவில் 12 தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் படகுகளும் 4 தற்கொலைப் படகுகளும் சாலைப் பகுதியிலிருந்து அதிவேகத்தில் வந்தன.

710 படையினர் இருந்த படகைத் தாக்க அவர்கள் முயற்சித்தனர். 710 படையினரையும் கண்காணிப்புக் குழுவினரையும் பாதுகாக்க கடற்படையினர் திருப்பிச் சுட்டனர். இத்துப்பாக்கிச் சண்டை பல மணி நேரம் நீடித்தது. கடற்படையின் ஒரு டோராப் படகு தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படகினால் அழிக்கப்பட்டது. அதில் 2 கடற்படை அதிகாரிகள், 15 படையினர் மற்றும் இராணுவ வானொலி இயக்குபவர் இருந்தனர்.

மற்றொரு கடற்படைப் படகு விடுதலைப் புலிகளின் 4 படகுகளை அழித்தனர். விமானப் படையினரது உதவியுடன் விடுதலைப் புலிகளின் மற்றொரு படகும் அழிக்கப்பட்டது. சரியான நேரத்தில் படைத்தரப்பினர் மேற்கொண்ட நடவடிக்கையால் காங்கேசன்துறைக்கு படையினர் கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர். காணாமல்போன கடற்படையினரைத் தேடும் பணி மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மேலதிகத் தாக்குதல்களை நடத்தாத வகையில் விமானப் படையினர் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின்போது தமிழீழ விடுதலைப் புலிகளால் இரணைமடுப் பகுதியில் சட்டவிரோத விமானத்தளம் அமைக்கப்பட்டிருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் முன்னரே பலமுறை சர்வதேச சமூகத்துக்கு அரசாங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய விமான வசதிகளை விடுதலைப் புலிகள் வைத்திருப்பது இலங்கையின் பாதுகாப்புக்கு மட்டுமல்ல இப் பிரதேசத்தின் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தல் என்றும் முன்னரே கூறியிருந்தோம். இத்தகைய செயற்பாடு தேசிய மற்றும் சர்வதேச வான்வழி நிர்வாக ஒழுங்கமைப்புக்கும் எதிரானது.

இது தொடர்பில் நேரடியாக பார்வையிட கண்காணிப்புக் குழுவினர் பலமுறை முயன்றபோதும் விடுதலைப் புலிகள் அனுமதி அளிக்கவில்லை. விடுதலைப் புலிகள் அனுமதி அளிக்கவில்லை என்று கண்காணிப்புக் குழுவும் தெரிவித்திருந்தது.

வெசாக் பண்டிகை கொண்டாட்டத்தின் தொடக்க நாளில் விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டமையானது இரு இனங்களிடையே மோதலை உருவாக்கும் முயற்சியாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கையை அரசாங்கம் வன்மையாகக் கண்டனம் செய்கிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கமைய அரசாங்கம் பொறுமை காத்து வருகிறது. விடுதலைப் புலிகளின் இத்தகைய பயங்கரவாத மற்றும் யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைகள் குறித்து சர்வதேச சமூகம் கோரிய முடிவுகள் மேற்கொள்ள வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை சமாதான செயலகம் வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கையில்,

அமைதி முயற்சிகளிலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக்கொள்கிற ஒரு உத்தியாக இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தகைய தாக்குதல்கள் மூலம் அரசாங்கம் பதில் தாக்குதல்களுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று விடுதலைப்புலிகள் எதிர்பார்த்தாலும் எமது படையினரையும் பொதுமக்களையும் மட்டும் இது பாதிக்காது. அமைதி முயற்சிகளையும் பாதிக்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த வியாழக்கிழமை வெற்றிலைக்கேணி மோதலில் கொல்லப்பட்ட கடற்படையினரது குடும்பத்தினருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுமைக்கும் வெசாக் கொண்டாட்டம் நடைபெறுகிறபோது இனரீதியான மோதல்களை விடுதலைப் புலிகள் உருவாக்க முயற்சிக்கின்றனர் என்று மஹிந்தவின் செயலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு உறுப்புரிமை

## மனிதவுரிமைகள் பேணப்படுமென நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு உறுப்புரிமை கிடைத்ததன் மூலம் இலங்கைக்கு பாரிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆசிய மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை சாசனத்தைக் கைக்கொள்ள நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு மனிதவுரிமைகளை கைக்கொள்ள தவறும் பட்சத்தில் அந்த உறுப்புரிமையிலிருந்து இலங்கையை நீக்கவும் நேரிடுமென்று அவர் சுட்டிக்காட்டினார்.

மனிதவுரிமை மீறல் தொடர்பில் இலங்கை பொலிஸார் மீது பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அவற்றை சீர்செய்யும் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மனித உரிமைகளையும் மதிக்கவேண்டும் என ஆசிய மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# பாதுகாப்பான கடல் பயணத்தை உறுதி செய்ய விசேட ஏற்பாடு

(கொழும்பு)

கடற்படையணியின் பாதுகாப்பான கடற்பிரயாணத்தை உறுதிசெய்ய விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்து இந்த விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்படையினரின் பேச்சாளர் கட்டளைத் தளபதி ரி.வி.கே. தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் கடற்படையினர் பயணிக்கும் கடற்பரப்புக்களில் கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்,

கடற்பரப்பில் காணாமல்போன கடற்படை சிப்பாய்களின் சடலங்களை தேடும் பணி தொடர்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். (க-9)

## அறிவுறுத்தல் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று சனிக்கிழமை நடைபெறவிருந்த அறிவுறுத்தல் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நாளை திங்கட்கிழமையும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இன்றும் அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறும் எனப் பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (க-9)

## இன்று ஒரு தகவல்

### இயேசுவின் இருப்பிடம்

அது ஒரு சிறிய கிராமம். அங்கே ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அதில் நிறைய பிள்ளைகள் படித்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு முன்பு கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவது வழக்கம். அதனைப் பிள்ளைகள் ஒவ்வொரு வேஷம் போட்டுக்கொண்டு நாடகம் மாதிரி நடித்துக்காட்டுவார்கள். மாதா,சூசையப்பர், ஆடு மேய்ப்பவர்கள், மூன்று ராஜாக்கள், காபிரியேல் தூதர் என எல்லோரும் அதில் வருவார்கள்.

காபிரியேல் தூதர் வானத்தில் தோன்றுவார். உங்களுக்காக இறைவன் மனுவாக அதவதரித்துள்ளார் என்று சொல்வார். வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றும். மூன்று ராஜாக்கள் தோன்றுவார்கள். இந்த நிகழ்ச்சிகளை மாணவர்கள் மேடையில் நடித்துக்காட்டுவார்கள். இப்படி ஒவ்வொரு வருடமும் கிறிஸ்து பிறப்பு விழாவைக்கொண்டாடுவது வழக்கம். அதுபோல் கொண்டாடுவதற்கு ஏற்ற முன்னேற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது.

யார் யாருக்கு என்னென்ன வேஷம் என்பதை ஆசிரியர்கள் முற்கூட்டியே முடிவு செய்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேஷம் கொடுத்தாயிற்று. அந்த வகுப்பில் ஒரு புத்திக்கூர்மையற்ற மாணவன் ஒருவன் இருந்தான். விளையாட்டில் கூட மற்றவர்கள் அவனைக் சேர்த்துக்கொள்வதில்லை. அவனுக்கும் ஒரு வேஷம் கொடுத்தாக வேண்டும். என்ன வேஷம் கொடுககலாம் அவனுக்கு என்று எல்லோரும் யோசனை செய்தார்கள். கடைசியாக ஆசிரியர் சென்னார் "இதோபார் நீ என்ன செய்கிறாய்? சூசையப்பரும் மாதாவும் ஒவ்வொரு விடுதியாக இடம் கேட்டுக்கொண்டே உன்னிடம் வருகிறார்கள். நீ விடுதிக்குள்ளிருந்து வெளியே வந்து இங்கே இடமில்லை என்று" கூற வேண்டும் அவ்வளவுதான் உன்வேலை என்றார். சரி என்று தலையாட்டினான் அந்த மாணவன்.

தினமும் தவறாமல் ஒத்திகை நடந்தது. எல்லாம் முறையாக நடந்தது. விழா நாள் வந்துசேர்ந்தது. கூட்டத்திலிருக்கும் எல்லோரும் மேடையை ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நிறைமாத கர்ப்பிணியான தேவமாதாவை அழைத்துக்கொண்டு வந்து சூசையப்பர் ஒவ்வொரு விடுதியிலும் இடம் கேட்கிறார். நமது மாணவனிடமும் வருகிறார். இடம் கேட்கிறார். இவன் இடம் இல்லை என்று பதில் சொல்லவேண்டும் ஆனால் சொல்லவில்லை. பேசாமல் அவர்களைப் பார்த்துக்கொண்டே நிற்கிறான்.

மேடைக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ஆசிரியர் இவன் பேசவேண்டிய வசனத்தை எடுத்துக் கொடுக்கிறார். இங்கே இடமில்லை என்று சொல்... இங்கே இடமில்லை என்று மெதுவாக சொல்கிறார். இவன் அப்போதும் ஒன்றும் சொல்லாமல் நிற்கிறான். கூட்டத்தில் சலசலப்பு எல்லோரும் சிரிக்கிறார்கள். மாதாவுக்கும் சூசையப்பருக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை தவிக்கிறார்கள். கடைசியாக அவன் வாயைத் திறந்தான். "ஐயா...! இங்கே இடமில்லை ஆனால் எங்கள் வீட்டுக்கு வாருங்கள் அங்கே நிறைய இடமிருக்கிறது" என்றான் கண்ணைத் துடைத்துக் கொண்டே!

பார்த்தால் அவனுடைய கண்கள் கலங்கியிருந்தன. உண்மையாகவே அழுதுவிட்டான். அதனால்தான் அவனுக்கு வார்த்தை வரவில்லை. சிரித்தவர்கள் எல்லோரும் அப்படியே மௌனமாகிவிட்டனர். தன்னையே மனுவாகத் தந்த இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையான பிறப்பிடம் இதுபோன்ற கள்ளமில்லாத உள்ளங்கள்தான். இது உண்மையாக நடந்த ஒரு நிகழ்ச்சி என்று என்னிடம் ஒரு சகோதரி சொன்னார்.

பத்து மாணவர்கள் சேர்ந்து ஒரு மதகுருவிடம் பாவ மன்னிப்பிற்காக வந்தார்கள். அவர் ஒவ்வொருவராக கூப்பிட்டு பாவசங்கீர்த்தனம் கேட்டுக் கொண்டிருக்கிறார். முதலில் ஒருவன் வந்தான் நான் ஒரு மட்டையைத் தூக்கி ஒரு கிணற்றில் போட்டுவிட்டேன். என் பாவத்தை மன்னியும் என்றான். அடுத்தவன் வந்தான். "நானும் அந்த மட்டையை ஒருமுறை கிணற்றில் போட்டேன் என்னை மன்னியும்"என்றான். அடுத்தவன் வந்தான் அவனும் இதையே சொன்னான். 9 பேரும் வரிசையாக வந்து இதே விஷயத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்டார்கள்.

கடைசியாக பத்தாவது மாணவன் வந்து நின்றான். "ஏனப்பா நீயும் மட்டையைத் தூக்கிக் கிணற்றில் போட்டாயா?" என்றுஃகேட்டார் மதகுரு. "இல்லை... மட்டையே நான்தான். என்னைத்தான் அந்த 9 பேரும் கிணற்றில் தூக்கிப் போட்டார்கள் என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# போராடிப் பெற்ற கடல் இறைமையை நாம் ஒருபோதும் இழக்கமாட்டோம்

## என்கிறார் கேணல் சூசை



(கிளிநொச்சி)

**போராடிப் பெற்ற கடல் இறைமையை எவரிடமும் இழக்கமுடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் இது பற்றித் தெரிவிக்கையில்,

தமிழீழம் கடல் சூழ்ந்த நாடு. எமது நாட்டை சிங்கள ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுப்பதற்காகத் தரையில் எவ்வாறு நாம் சமர் புரிந்தோமோ அவ்வாறு தான் கடலிலும் சமர் புரிந்தோம்.

எமது தாயக நிலத்தில் கணிசமான பகுதி எவ்வாறு எதிரியிடமிருந்து விடுவிக்கப்பட்டதோ அதுபோலவே கடற்பரப்பிலும் கணிசமான பகுதியை மீட்டெடுத்துள்ளோம். எனவே போராடிப் பெற்ற கடல் இறைமையை எவரிடமும் இழக்கமுடியாது.

இன்று வடபகுதிக் கடற்பரப்பில் நாகர்கோவிலிருந்து கொக்குத்தொடுவாய் வரையான நீண்ட தொடர் கடற்பரப்பு எமது ஆளுகைக்குள் இருக்கிறது.

இக் கடற்பரப்பில் பயிற்சியாயினும் சரி விநியோக நடவடிக்கைகள் ஆயினும் சரி எவரது தலையீடுமின்றி எம்மால் சுதந்திரமாக ஈடுபடமுடியும். அதனைத் தடுத்து நிறுத்த எவராவது முனைந்தால் அவர்களுக்கு எதிராக போர் தொடுக்க நாம் ஒருபோதும் தயங்கப் போவதில்லை.

எமது தாயகப் பகுதியில் எம்மை நாமே பாதுகாப்பதற்கு எத்தகைய படைக் கட்டுமானத்தையும் கொண்டிருக்கக்கூடிய உரிமையும் அதிகாரமும் எமக்கு இருக்கிறது.

இன்று இறைமையுள்ள ஒரு நாட்டின் கடலில் தேச அங்கீகாரம் பெறாத எந்த அமைப்பும் கடற்படையைக் கொண்டிருப்பதற்கு அனுமதிக்க முடியாது என்று கூறுகின்றார்கள். அவர்களுக்கு நாம் எமது தேசத்தில் கொண்டிருக்கின்ற எந்தவொரு கட்டுமானங்களும் எமக்கு வெகுமதியாகத் தரப்படவில்லை. எல்லாமே நாம் போராடிப் பெறப்பட்டவை. அவ்வாறு போராடித்தான் கடற் கட்டுமானத்தையும் பெற்றோம்.

கடலில் நாம் இன்று கொண்டிருக்கின்ற எமது பலம் நாம் சுமார் ஒன்றரை தசாப்த காலமாக தீவிரமாகப் போராடிப் பெற்றது. ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட போராளிகளினது உயிர்களை நாம் இதற்கு விலையாக செலுத்தியிருக்கின்றோம்.

போர் இடம் பெற்ற காலப் பகுதிகளில் கூட உலகின் எப்பகுதியோடும் நாம் நினைத்த மாத்திரத்தில் கடல் வழித் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய நிலையிலேயே இருந்தோம். அப்போதெல்லாம் எம்மை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. யுத்த காலத்தில் செய்ய முடியாததை சமாதானம் என்ற போர்வையைப் பயன் படுத்தி மட்டும் எவ்வாறு அவர்கள் சாதிக்க முயல முடியும்? அதை நாம் எவ்வாறு அனுமதிக்க முடியும்?

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள எமது பகுதிகளுக்கு கண்காணிப்புக் குழுவினரின் அங்கீகாரத்துடன் கூடிய கடற்பயணங்கள் இரண்டை நாம் மேற்கொண்டிருந்தோம். அப்போது கண்காணிப்புக் குழுத்தலைவர் எம்முடன் கைகுலுக்கிக் கொண்டு அந்தப் பயணத்தை தொடக்கி வைத்தார். இப்போது மட்டும் புதிய நிபந்தனைகள், வியாக்கியானங்கள் எங்கிருந்து புதிதாக முளையெடுக்கின்றனவோ தெரியவில்லை.

எதிர்வரும் காலங்களிலும் மீட்டெடுக்கப்பட்ட எமது பூரண அதிகார வரம்பிற்கு உட்பட்ட கடற்பரப்பில் எமது கடல் நடவடிக்கைகள் தொடரும். இடையூறுகள் விளைவிக்கப்பட்டால் பதில் நடவடிக்கைகளும் தொடரத்தான் போகின்றன என்றார். (க)

## பேச்சுக்களில் பங்குபற்றுங்கள் புலிகளிடம் அனான் கோரிக்கை

வன்செயல்களை கைவிட்டு நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்குமாறு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யாவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள கோபி அனான் செய்தியாளர்களுக்கு இதுபற்றி கருத்து தெரிவிக்கையில், 'யுத்த நிறுத்த கண்காணிப்பாளர் பயணம் செய்த கப்பல் மீதான தாக்குதல் உட்பட இலங்கையில் பாரிய கடல் மற்றும் ஆகாய தாக்குதல்கள் இடம் பெற்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த கவலை அடைந்துள்ளேன்.

குறிப்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு அங்கத்தவர்கள் பயணம் செய்யும் கப்பல்கள் மீதான தாக்குதல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமரவில்லை

(திருகோணமலை)

மூதூர் கிழக்கு விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டு பகுதியை நோக்கி மேற்கொண்ட தாக்குதலினால் இடம் பெயர்ந்துள்ள 4 ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீண்டும் கிராமங்களுக்கு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதி மக்கள் மூதூர் பிரிவில் பாட்டாளிபுரம், வீரமாநகர் , நல்லூர் போன்ற கிராமங்களிலும் ஈச்சிலம்பற்று பிரிவில் இலங்கைத்துறைமுகத்துவாரம், கல்லடி, புன்னையடி போன்ற கிராமங்களிலும் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் பொது இடங்களிலும் மரநிழல்களிலும் தங்கியுள்ளதாக தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மூதூர் கிழக்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள இம்மக்கள் கடந்த 25,26 ஆம் திகதிகளில் இடம்பெற்ற தாக்குதலினாலும் இடம்பெயர்ந்து இருவாரங்களுக்கு பின்னரே கிராமங்களுக்கு திரும்பியிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இடம்பெயர்ந்துள்ள மக்கள் குடிநீர், உணவு ,சுகாதார வசதியின்றி கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)









மூதூரில் கடந்த வியாழக்கிழமை படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்களை படங்களில் காணலாம். கடலில் கடற்படையினர் நெருக்கடியை எதிர்கொள்ள அதற்கு பழிதீர்க்கும் முகமாக மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பதிவுகள் இது.

# ஊடகங்களை தாக்குவோர் உண்மையை விரும்பாதவர்கள்




ஊடகங்கள் இன்றைய காலகட்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாறியுள்ளன. குறிப்பாக இன்றைய கால கட்டத்தில் உலகின் பெரும்பாலான நாடுகளின் ஜனநாயக ஆட்சி நிலவுகின்ற நிலையில் அந்த ஜனநாயகத்தை தாங்கிப்பிடிக்கின்ற முக்கிய தூண்களாக இந்த ஊடகங்கள் மாறியுள்ளன. அதேபோல உலகின் பெரும்பாலான நாடுகளில் இந்த ஊடகங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டு அவற்றிற்கு சுதந்திரமும், செய்தி சேகரிப்பதற்கான பூரண வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் தான் இவ்வருடமும் சர்வதேச ஊடக சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

எனினும் இலங்கையில் இவ்வருட ஊடக சுதந்திர தினம் வழமையை விட மிக மோசமாகவே அமைந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் முன்னணி பத்திரிகையான உதயன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடே இதற்கு காரணமாக அமைந்தது. இத்தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதுடன் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

இலங்கையில் ஊடகத்துறையின் மீதான தாக்குதல் மிக நீண்ட காலமாகவே இடம்பெற்று வருகின்றது. ரிச்சட் டி சொய்சா போன்றோர் கொண்டிருந்த அரசியல் கருத்துக்காக கொல்லப்பட்டனர்.

எனினும், இனப்பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டு தமிழ் பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் வன்முறைகளுக்கும், கெடு பிடிகளுக்கு ஆளாகி வருகின்றனர்.அண்மையில் கொழும்பிலும், தினக்குரல், சுடரொளி பத்திரிகைகள் மீது கெடுபிடிகளும், வன்முறைகளும் பிரயோகிக்கப்பட்டிருந்தன. தினக்குரல் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளைப் போல நடத்தப்பட்டிருந்தனர். மேலும், 2000ம் ஆண்டில் கொல்லப்பட்ட யாழ்ப்பாண ஊடகவியலாளர் நிமலராஜன், கிழக்கு ஊடகவியலாளர் நடேசன், சர்வதேச ஊடகவியலாளர் சிவராம் போன்றோரது கொலைகள் இனப்பிரச்சனையை அடிப்படையாகக்கொண்டே இடம்பெற்றுள்ளமை உலகறிந்த உண்மையாகும்.

-ஜீ. யோகப்பிரியா

தற்போது வடகிழக்கில் வன்முறைகள் மிக மோசமாக அதிகரித்துக்கொண்டு வருகின்றமையை காணமுடிகிறது. படையினர் மீதான கிளைமோர் தாக்குதல்கள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், படுகொலைகள் மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்குள் ஊடுருவி இடம்பெறும் கொலைகள் என வன்முறைகள் பெரும் அதிகரிப்பினைக் கண்டுள்ளன.

இவ்வாறான ஆபத்தான நாட்டுச் சூழலில் தமிழ் ஊடகவியலாளர்களின் பணி மிக ஆபத்தானதாகவே இருக்கிறது. கடந்த மே மூன்றாம் திகதி நிப்பொன் ஹோட்டலில் வெளியிட்டு வைக்கப்பட்ட தெற்காசிய ஊடகவியலாளர்களின் அறிக்கையும் இதனையே தெரிவித்து நிற்கின்றது. தெற்காசியாவில் ஊடகவியலாளர்களுக்கு முதலாவது ஆபத்தான நாடாக இலங்கை காணப்படுவது இதன் மூலம் வெளிப்படுகிறது.

எவ்வாறெனினும் ஊடகவியலாளர்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்படும் போது அவர்களால் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்த மட்டுமே முடியும். கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளாமல் எழுதுகோலுக்கு எதிராக துப்பாக்கியை பிரயோகிப்பதானது இந்த நாடு எத்தகைய மிலேச்சத்தனமான நிலையில் உள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

ஊடகவியலாளர்கள் மீது இடம்பெறுகின்ற இந்த வன்முற்றைகள் உண்மையை விரும்பாத, உண்மையை மறைக்க விரும்புகின்றவர்களின் கொடூரமான செயற்பாடுகளே என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த வன்முறைகளை நிறுத்தி சுதந்திர ஊடக செயற்பாட்டிற்கு ஆதரவு வழங்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உண்டு. இந்த கடமையிலிருந்து அரசாங்கம் தவறும் பட்சத்தில் பெரும் பழியை சுமக்க வேண்டி நேரிடும்.

## களுத்துறை சிறையிலிருந்து

### சமர்ப்பணம்

பலராலும் வேண்டப்படுவது
வலுவிழந்து போகிறது
வேண்டா வெறுப்பாய் நேசித்து
உலக அரங்கில் நாடகமாடும்
ஒரு சிலரால் இது
செத்துக் கொண்டிருக்கிறது
குற்றுயிருடன்
இனவாதிகளின் நரகல் கரங்களினுள்
கிடந்து சாகும் இது
தேவை கருதி
அவ்வப்போது
உயிர்த்துக் கொள்கிறது

எத்தனை மேசைகளில்
இதற்கு நிரந்தர உயிர் கொடுக்க
முயற்சித்தோம்
வீணாய் போன
விதண்டாவாத பேச்சுக்களால்
இதற்கு சாவு மணி அடித்தார்கள்

இது உயிர் பெறும் போது
பல்லாயிரம் உயிர்கள்
காப்பாற்றப்படுகின்றனர்
இது சாகடிக்கப்படும் போது
பலநூறு உயிர்கள்
காவு கொள்ளப்படப்போகின்றன

இதற்கு
நிரந்தரமான
உயிர் கொடுங்கள்
நிம்மதியாக
நான் வாழ வேண்டும்.

கல்லடி றொபேட்
களுத்துறை சிறையிலிருந்து

## கருத்தாடல் களம்

### தயவு செய்து வன்முறைகளை நிறுத்துங்கள்

தொடருகின்ற வன்முறைகள் மக்களாகிய எம்மை மிகவும் துன்பத்துள் தள்ளியுள்ளது. எங்களால் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. பாடசாலைகளுக்கு பாதுகாப்பாக அனுப்ப முடியவில்லை. வேலைக்கு செல்லுபவர்கள் மீண்டும் வீடு வந்து சேர்வார்களா என்பது கேள்விக்குரியதாகியுள்ளது. எனவே எமது துயரத்தை உணர்ந்து தயவு செய்து வன்முறைகளை நிறுத்தும்படி மக்களாகிய நாம் சகல தரப்பினரையும் வேண்டுகிறோம்.

கே. காருண்யா
வடமாராட்சி

### முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு ஒரு வேண்டுகோள்

முஸ்லிம் சமூகம் அரசியல் கட்சி ரீதியாக பிரிந்து சிதறிக் கிடக்கிறது. அரசியல்வாதிகள் ஒவ்வொரு கருத்தினை வைத்துக் கொண்டு தமது மக்களை பிரித்தாளுகின்ற போக்கையே காணமுடிகிறது. சில அரசியல்வாதிகள், முஸ்லிம்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பது போல காட்டிவிட்டு கொழும்பில் சுகவாழ்வு வாழ்கிறார்கள். இன்னும் சிலர் வடகிழக்கை பிரிக்க வேண்டுமெனக்கூறி பேரினவாதிகளின் செல்லப் பிள்ளையாக முயற்சிக்கிறார்கள். இவர்களால் எமக்கு எந்த இலாபமும் இல்லை. எனவே தயவு செய்து முஸ்லிம் அரசியல்வாதிகளே ஒன்றுபடுங்கள் மக்களுக்கு பாடுபடுங்கள்

எம். றிஸ்வி அகமத்
மருதமுனை

## யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு குரல்

கடந்த 2002ம் ஆண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையினைத் தொடர்ந்து மக்களின் வாழ்விலும் மனதிலும் ஓர் புத்துணர்வு தோன்றி கடந்த 2005ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலும், இன மதவாத போக்குடையவரும் ஆட்சி மாற்றமும் இதில் சரிவினை ஏற்படுத்தும் முனையாகியது.

இன்று யாழ் மக்களின் வாழ்வு என்பது கேள்விக்குறியாகிவிட்டது. சந்திக்கு சந்தி என்று நின்ற ராணுவம் தற்போது ஒழுங்கைக்குள்ளே எல்லாம் நின்று வழிமறிக்கின்றனர். இதனை விட ஊரடங்குச் சட்டம் சொல்தான் இங்கில்லை ஆனால் அதன் இயல்பினை அவதானிக்க முடிகின்றது. தற்சமயம் இரவு 7 மணி தாண்டினால் வீதிக்குவர அச்சத்தில் தமது கடமைகளை சுருக்கமாக்கி விட்டு வெகு விரைவில் வீடு சேர்கின்றனர். ஆனால் வீட்டில் மட்டும் பாதுகாப்பு உள்ளதா என்றால் இல்லை. இரவில் கள்வர்களின் பயம். என்ன ஆச்சரியம் ராணுவம் தான் றோட்டுக்கு றோட்டு நிற்கின்ற போது கள்ளர் நடமாட்டமா? இதுதான் வேலி பயிரை மேயும் கதை.

அடுத்து யாழ் மக்களின் மனநிலையினை நோக்கின் இயல்பாகவே மனமானது எதிர்நிலை தன்மை பற்றி சிந்திக்கும். இதே போல் மக்களின் மனமும் இவ்விரு எதிர்நிலைப்பட்டதாக காணப்பட்டாலும் அதன் தன்மை என்பது அதிகம் அதாவது போரா? சமாதானமா? சாவா ? சகவாழ்வா? என்று வாழ்வது கூட உரிமையற்ற வகையில் எங்கும் நிலை காணக்கூடியதாக உள்ளது.

வெளியில் சென்ற கணவன், பிள்ளைகள் வீடு திரும்பு மட்டும் மனைவிக்கும், வெளியில் சென்றவர் தான் வீடு திரும்பும் மட்டும் அவருக்கும் அச்ச உணர்வு. எங்கே சூடுவிழும், எங்கு கிளைமோர் வெடிக்கும், எங்கு ராணுவம் அடிக்கும் என்ற சிந்தனை தான். இதனால் மனிதனுக்கு நோய்தான் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

எனவே, சமாதான விரும்பிகளாக நீங்கள் காணப்படாவிட்டாலும் போரினை மட்டும் விரும்பாதவர்களாக அனைவரும் இருக்க முயற்சி செய்யுங்கள். குறிப்பாக அரசியல்வாதிகளே நீங்கள் தான் மேற்குறிப்பிட்ட வகையில் வாழப்பழகுங்கள்.

சிந்தனை
யாழ்ப்பாணம்

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை – 26 (தொடர்ச்சி)

2. கல்வியானது மனிதனின் ஆளுமையை முழுமையாக விருத்தி செய்யவும்,மனித உரிமைகளுக்கும் அடிப்படை சுதந்திரங்களுக்குமான மரியாதையை வலுப்படுத்தவும்கூடியதாக ஆற்றுப் படுத்தப்படல் வேண்டும். அது சகல நாடுகளுக்கிடையேயும் இன அல்லது மதக்குழுவினருக்கிடையேயும் மன ஒத்திசைவு, பொறுதியுணர்வு, தோழமை ஆகியவற்றை மேம்படுத்துதல் வேண்டுமென்பதுடன், சமாதானத்தை பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகளை மேற்கொண்டு செல்லுவதற்குதவவும் வேண்டும்.

## தலவாக்கலை நீர்த்தேக்கத் திட்டம்

### பின்னணியும் எதிர்ப்பியக்கமும் மலையகத் தலைமைகளும்

- மோகன்ராஜ்

(கடந்தவார தொடர்ச்சி)

அவர்களது உள்ளூர் தரகர்களான அரசியல்வாதிகள், சுதேச கம்பனிகள் விஞ்ஞானிகள், உயரதிகாரிகள் ஆகியோர் பெரும் பணக்காரர் ஆகிவிடுகின்றார்கள். இவற்றின் பளு மக்கள் மீதே விழுகின்றது. (மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி திசாநாயக்க திடீரென இலங்கையின் பெரும் தனவந்தர்களில் ஒருவராக மாறிய மர்மம் அனைவருக்கும் தெரிந்த இரகசியமாகும்.) இத்திட்டத்தின் பிரமாண்டம் விரிவடையும் அளவுக்குத்தான் இவர்களுக்கு கிடைக்கும் இலாபத்தின் அளவும் அதிகரிக்கும் என்கின்ற நிலமை இருப்பதனால் தேவையற்ற பல அம்சங்கள் இத்திட்டங்களில் சேர்க்கப்படுகின்றன. அதில் பிரதான இடத்தை இத்திட்டங்களுக்காக அமைக்கப்படும் விசாலமான ஆடம்பரமான வீதிகள் வகிக்கின்றன. இதற்கு நல்ல உதாரணம் கொத்மலை நீர்த்தேக்கத்தில் போடப்பட்டிருக்கும் சங்கிலி பாலம் - நாவலப்பிட்டி அகலப்பாதை. இந்த காட்டு வழிப்பாதையை இப்பொழுது யாரும் பொருட்படுத்துவதே இல்லை. பலகோடி ரூபாய் செலவில் தேவைக்கு மேலதிகமாக அமைக்கப்பட்ட இப்பாதை பயன்படுத்தப்படாமல் உள்ளது. பாரம்பரிய விவசாய முறைகளும் உள்ளூர் தொழில் நுட்பங்களும் புறக்கணிக்கப்பட்டு பல்தேசிய நிறுவனங்களின் இலாபத்தை தொடர்ச்சியாக பெருக்கும் விவசாய முறைகள் இங்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

இதற்கு கர்நாடக மாநிலத்தின் மலபிரபா திட்டம் சான்று பகிர்கிறது. பாரம்பரிய விவசாய முறை கைவிடப்பட்டு இன்று கடனாளியாகி வறுமை நிலையில் விவசாயிகள் அல்லல்படுவதை ஏற்கனவே பார்த்தோம். இனி இந்த சர்வதேச அனுபவங்களை மனதிற்கொண்டு தலவாக்கலை நீர்த்தேக்க திட்டத்திற்கே செல்வோம்.

**தலவாக்கலை நீர்த்தேக்கத்திட்டம் : காமினி திஸாநாயக்கவின் கனவு**

தலவாக்கலை நீர்த்தேக்க திட்டத்தை மகாவலி அபிவிருத்தியின் ஒரு கட்டம் என்பதை விட் மலையக தமிழ் மக்களின் செறிவான பரம்பலை சிதறடிக்கும் காமினி திஸாநாயக்கவின் இரகசியத் திட்டத்தின் உச்ச கட்டம் என்பதே பொருத்தமானதாகும்.

இதற்கொரு நீண்ட பின்னணி உண்டு. காலஞ் சென்ற முன்னாள் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்க நுவரெலியா மாவட்டத்தில் உள்ள கொத்மலையில் பிறந்தவர். இது தலாவாக்கலைக்கு அருகில் உள்ள ஒரு சிங்கள கிராமம். இதற்கொரு வரலாறு உண்டு. பேரினவாதிகளால் இன்று சிங்கள தேசிய வீரனாக சித்தரிக்கப்படும் துட்டகைமுனு இந்த கிராமத்திற்கு தப்பி ஓடிவந்து ஒளிந்திருந்ததாகவும், இங்கு ஒரு சிங்கள பெண்ணை திருமணம் செய்து அதன் மூலம் குழந்தைகள் பிறந்ததாகவும் பின்னர் இந்த கிராமத்தில் இருந்தே படை திரட்டி ஏனைய சிற்றரசர்களை வெற்றிகொண்டு இறுதியாக எல்லாளனைக் கொன்று முழு இலங்கைக்கும் அவனே அரசனானதாகவும் ஐதீகக் கதை உண்டு. இதனை இந்த கிராமத்தில் உள்ள மேட்டுக் குடியினர் நம்புகின்றனர். அதையிட்டு பெருமை கொள்ளவும் செய்கின்றனர். துட்ட காமினியின் பெயரைத் தாங்கிய காமினி திஸாநாயக்க இதற்கு ஒரு படி மேல் போய் தன்னைத் தானே துட்டகைமுனுவின் இரத்தவழித் தோன்றல் எனக் கருதவும், பகிரங்கமாக கூறவும் தொடங்கினார். அவர் கண்ட கனவுகளில் ஒன்றுதான் மலையகத்தில் தமிழர்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் இன விகிதாசாரத்தை மாற்றியமைப்பதாகும். இந்த கனவை நிறைவேற்றும் வாய்ப்பு அவருக்கு ஜே. ஆர் ஜயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் (1977–90) கிடைத்தது. இலங்கையின் முதலாவது பிரதமர் டீ.எஸ். சேனநாயக்க காணி, விவசாய அமைச்சராக இருந்தபோது வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள குடியேற்றங்களை நிறுவி எப்படி தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்த மண்ணின் இன அடையாளத்தை மாற்றினாரோ அதே காரியத்தை மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்து கொண்டு காமினி திசாநாயக்க மலையகத்தில் செய்தார்.

மகாவலி அபிவிருத்தி திட்டத்தை துரித கதியில் செய்து முடிக்கும் தீர்மானத்தை ஜே. ஆர். அரசு மேற்கொண்டதும். அதனை அமுல் படுத்துவதற்காக அதிகார சபை ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு மகாவலி அபிவிருத்தி என்கிற பெயரில் மகாவலி படுக்கையை சுற்றி வரவுள்ள பகுதிகளையும் நீர்வளத்தை பாதுகாத்தல், நீரேந்து பகுதிகளில் காடு வளர்த்தல், நீரில் மூழ்கும் கிராமங்களில் உள்ள சிங்களவரை மீளக்குடியமர்த்தல் என்கிற பெயரில் சுவீகரிப்பதற்கான விசேட அதிகாரம் அதற்கு வழங்கப்பட்டது. இவ்வதிகாரத்தை காமனி திசாநாயக்க முழு அளவில் பயன்படுத்தினார்.

(மிகுதி அடுத்த வாரம்)

நன்றி - தேனீ இணையத்தளம்

## கண்டது.. கேட்டது.. படித்தது..




விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டீ.பீ. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் 0112787041-9 தொலைநகல் இலக்கம் 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்

நாம் ஒருவரை அறிந்திருந்தால் தான்அவரோடு எவ்வித தயக்கமும் இன்றிப் பழகுவோம். அதே போலவே தெரிந்த ஒரு செயலைத் தான் இலகுவாகவும் பிழையின்றியும் செய்யமுடியும். அறியாத ஆளுடன் பழகவும் முடியாது. தெரியாத செயலை சரியாகச் செய்யவும் முடியாது.

சில விடயங்கள் எமக்குத் தெரிந்திருந்தும் நாம் அவற்றை சரியாகச் செய்ய முடியாமல்தவிப்பவர்களாக இருக்கின்றோம். ஒரு மோட்டார் வண்டியைத் திருத்துவதற்கு திருத்துபவரை நம்பி ஒப்படைக்கின்றோம்.

ஆனால் எமது வாழ்வைத் திருத்துவதற்கு இறைவனிடம் எம்மை ஒப்படைக்க மறுக்கின்றோம். மனிதர்களையும்அவர்களது வார்த்தைகளையும்நம்பும்நமக்கு இறை வார்த்தை கூறும் வழிகள் இடறல் போல் தோன்றுகின்றன.

### பண்பும் பாசமும் வளர்த்தல்

ஒவ்வொரு கிறிஸ்தவனும் சொல்லிலும் பேச்சிலுமல்ல; செயலிலும் உண்மை அன்புள்ளவனாக விளங்க வேண்டும். இதனாலேதான் நாம் ``உண்மையைச் சார்ந்தவர்கள் என்பதை அறிந்துகொள்வோம்''. வீண் பசப்பு வார்த்தைகள் அன்பாகமாட்டா. கடவுளில் நிலைத் திருக்கின்றோம் என்றால் அவரது வார்த்தையில், அவரது கட்டளைகளில் நிலைத்து இருக்கின்றோம் என்பதே பொருள். நேற்றைய தோல்விகளை எண்ணி மனங்கலங்காமல் அவற்றை இன்றைய வாய்ப்புக்களாக மாற்றிக் கொள்ளமுயலவேண்டும். ஒருவரைக் கடிந்து புத்தி சொல்வதை விட, பண்போடும் பாசத்துடனும் நடந்துகொள்ளும்பொழுது அது சிறந்த அறிவு புகட்டலாக அமையும். இயேசுவும் தம் சீடர்களுடன் அன்போடும், அமைதியோடும் நடந்து கொண்டதனாலே சீடர்கள் இயேசுவோடு நிலைத்திருந்தார்கள். அவருக்காக உயிரையும் கொடுத்தார்கள். ``நாம் பிறருக்கு உதவுவது முக்கியமல்ல, உதவும் முறைதான் முக்கியம்'' என்று பியர்ஸ் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.

### பிறருக்கு உதவுதல்


எம் அயலில் இருப்பவர்களை வெறுப்பதை விட, அவர்களைப் பாராமுகமாக இருந்து, நமது வாழ்வை எக்குறையும் இன்றி வாழ்வதனால் நிறைவைக் கண்டு விட முடியாது. இறைவனை அறிந்து கொள்ளவோ, அவரின் ஆசீர் வாதங்களைப் பெற்றுக்கொள்ளவோ முயற்சிப்பது அவர்களுக்கு யாதொரு பலனும் தராது. ஆனால் எம்மில் பலர் இவ்வாறு தான் வாழ்கின்றார்கள். ஆலயத்துக்கு அள்ளிக் கொடுப்பார்கள். அயலிலுள்ளவன் பசியோடு இருந்தால் ஆபத்துக்கு உதவமாட்டார்கள். அயலவனை அன்பு செய்யாமல் இறைவனிடம் செல்ல முடியாது.

## பரமபிதா காட்டிய பாதை

கொடூரச் செயல்கள் மலிந்த காலத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். எம் எண்ணங்கள் சொல் செயல்களில் தூய்மையில்லை. இரக்கமில்லை. மன்னிப்பு இல்லை. மனிதத்தன்மை இல் லை. இதனாலே எங்கும் உயிர்க் கொலைகள் கேட்கின்ற, காண்கின்ற செய்திகளாக இருக்கின்றன.

### இறைவேண்டல் வேண்டும்

நாட்டில் அமைதியற்ற சூழ்நிலை நிலவி வருவதினால் அமைதியைக் குலைக்கும் விதங்களில் நாம் நடந்துகொள்ளக் கூடாது. இறை பராமரிப்பின் அவசியத்தை உணர்ந்தவர்களாக உள்ளம் உருகி இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். மனிதனின் முயற்சிகள் கைவிடப்பட்ட நிலையில் இறைவனின் அருள் எம் எல்லோருக்கும் அருளப்படும். புனித பவுலடியார் கூறுவது போன்ற ``என்ன நேர்ந்தாலும் இறை வேண்டலுடன் கூடிய மன்றாட்டில் இறை வனுக்கு நன்றி கூறுங்கள்'' அவனின்றி அணுவும் அசையாது என்பது போல் இறைவன் அனுமதிக்காது அழிவுகள் எம்மைத் தொடராது.



**P.மரியநிலக்ஷி செல்வமகன்**

அடுத்தவர்களுக்கு உதவும் பண்பை வளர்த்துக் கொள்வோம். மற்றவர்களை மதிப்பதன் மூலம் சிறந்த பிள்ளைகளாகவும், வருங் காலத்தில் நற்பிரஜைகளாகவும் வாழமுடியும்.

காலத்தை உணர்ந் தவர்களாக ஒவ்வொருவரும் செயற் படவும் கடமைகளைக் கண்ணியத் துடன் ஆற்றவும் இறை நம்பிக்கையும் இறைபற்றும் உள்ளவர்களாக விசுவாச வாழ்வு வாழ இறைவரம் வேண்டுவோம். □

## கண்டியில் இரு சிறுவர்கள் கைது

(கண்டி)

கண்டி தொடரூந்து நிலையத்தில் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடியதாகக் கூறி இரு தமிழ்ச் சிறுவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள னர்.

அவர்களிடம் தலா 4ஆயிரம் ரூபா பணமும் செல்லிடப் பேசிகள் உள்ளிட்ட ஆடம்பரப் பொருட்களும் இருந்துள்ளன.

அத்துடன் இவர்கள் ஹட்டனிலிருந்து கொழும்பு செல்வதற்காக பயணச்சீட்டையும் வைத்திருந்தனர். இருவரும் 12 வயது முதல் 13 வயதுக்குட்பட்டவர்கள்.

இருவர் மீதும் சந்தேகமடைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

## மஹோற்சவம்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன்தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 13 தினங்கள் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றமும், 21ஆம்திகதி பக்தமுத்தி பாவன 63 நாயன்மார் உற்சவமும், 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பரத் திருவிழாவும், 25ஆம் திகதி வியாழக்கிழமை தேர் உற்சவமும், 26ஆம் திகதி வெள்ளிக் கிழமை தீர்த்த உற்சவமும், 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகமும், பூங்காவனமும் நடைபெறும். (து)

# “தாழ்ந்த தமிழினம் தலைநிமிர வழி செய்யுங்கள்”

## தமிழக முதல்வரிடம் பிரேமச்சந்திரன் கோரிக்கை

``தமிழக அரசியல் வரலாற்றின் அரை நூற்றாண்டு தாண்டிய நீண்ட பக்கங்கள் தங்கள் சேவைகளை எப்பொழுதும் பேசும். முதிய வயதில், ஆனால் மிகவும் இளமையுடன் மீண்டும் ஒரு முறை தங்களுக்கு சேவை செய்யத் தமிழக மக்கள் தங்களை அழைத்துள்ளார்கள். தங்களது மாபெரும் வெற்றிக்கு ஈழத் தமிழரின் இதய பூர்வமான வாழ்த்துக்கள்''

தமிழக சட்டமன்றத் தேர்தலில் வரலாறு காணாத சாதனை படைத்த கலைஞர் கருணாநிதியின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் அவர் மேலு ம் தெரிவித்துள்ளதாவது:

``ஈழத்தமிழரின் 30 வருட விடுதலைப் போராட்டத்தில் பல ஆயிரம் பேர் மரணித்துவிட்டார்கள். பல இலட்சம் பேர் அகதிகளாக இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். தமிழரின் உரிமைகளை சிங்கள அரசிடமிருந்து பெற்றுக்கொள்வது என்பது இன்றும் கல்லிலே நார் உரிக்கும் கதையாகவே உள்ளது. போர் மேகம் சூழ்ந்து நாளாந்தம் தமிழர் கொல்லப்படும் மண்ணிலிருந்து தமது தாய்த் தமிழ் நாட்டையும் எமது விடுதலைக்கான தங்கள் குரலையும் ஈழத் தமிழர் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்தத்தை முழுமையாக நிறுத்தி, தமிழ் மக்களுக்கு கௌரவமான ஒரு தீர்வு ஏற்பட தங்களினதும் தமிழக மக்களினதும் முழுமையான ஒத்துழைப்பு ஈழத் தமிழர்களுக்கு என்றும் தேவை.

தங்கள் காலத்தில் ஈழத் தமிழர் சுதந்திரத்துடன் தலைநிமிர்ந்து நிற்கத் தாங்களும் தமிழகமும் இந்தியப் பேரரசுக்கு வழிகாட்ட வேண்டுமென் வேண்டுகி றோம்.

இந்தியாவில் முன்னணி மாநிலமாகத் தமிழகம் செழிக்கவும் தமிழர் விடுதலை பெறவும் மீண்டும் ஒரு முறை எமது இதயபூர் வமான வாழ்த்துக்கள்'' (து)

# படிவங்களை நிரப்பி பெறும் இராணுவம்

நேற்று முன்தினம் பிற்பகல் 2மணியளவில் ஈச்சமோட்டை பகுதியை சுற்றி வளைத்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று ஐந்து படிவங்களைவீட்டுக் குடியிருப்பாளர்களிடம் கொடுத்து நிரப்பித் தருமாறு கோரிப் பெற்றுள்ளார் கள்.

அப் படிவங்களில் வீட்டுக்குடியிருப்பாளர்களதுபெயர், வயது, முகவரி, தே.அ. அட்டை இலக்கம், தொழில் முதலிய விபரங்களைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

நிரப்பப்பட்ட ஐந்து படிவங்களில் நான்கை தம்வசம்வைத்துக்கொண்ட இராணு வம். ஒரு படிவத்தை வீட்டு உரிமையாளரை வைத்துக்கொள்ளுமாறுகேட்டுள்ளதாகத் தெரிகிறது.

இச் சுற்றிவளைப்பின் போது இராணுவம் மக்களுடன் நல்ல முறையில் நடந்துகொண்டதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள். (து-110,132,133)

## குறைகேள் அரங்கு

### திடீர் மின்வெட்டு

சில காலத்துக்கு முன் சுழற்சி முறையில் அமுல் நடத்தப்பட்டு வந்த மின்வெட்டு இப்பொழுது எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி தினசரி சில மணிநேரம் அமுல் நடத்தப்படுவதால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் சொல்லில் அடங்கா. இவ்விதம் தினமும் திடீர் திடீரென மின்வெட்டை அமுல்நடாத்துவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டுள்ளது என்பது தெரியாமல் பொதுமக்கள் குழப்பமடைகிறார்கள். மின்சாரத்தை தடையின்றி வழங்குவதற்கான எரிபொருளை தடையின்றி வழங்கத் தயாராக இருப்பதாக இராணுவம் அறிவித்த ஓரிரு தினங்களிலிலேயே இத் தினசரி மின்வெட்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

இதனால் மின்பாவனையாளர்கள் தினமும் கொளுத்தப்பட்ட மண்ணெண்ணெய் விளக்குகளுடன் தயார்நிலையில் இருக்க வேண்டியுள்ளது. தினமும் ஒவ்வொரு மின்பாவனையாளரும் ஒரு மின் குமிழை எரிக்காமல் விட்டால் மின் தட்டுப்பாடு ஏற்படாது என யாழ். மின்சாரசபை தலைவர் பகிரங்கமாக அறிவித்ததையடுத்து இத் தினசரி மின்தடை அமுலுக்கு வருவது பலவிதமான ஐயப்பாடுகளை ஏற்படுத்துவதாக உள்ளது. அத்துடன் எவ்வித முன்னறிவித்தலுமின்றிக் கடந்த மாதத்திலிருந்து மின்கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது.


இவ்விதம் மின்சாரசபையின் கையில் சிக்கித் தவிக்கும் மின்பாவனையாளர்களுக்கு என்றுதான் விமோசனம் கிடைக்குமோ எனத் தெரியவில்லை.


ஏமாளி மின்பாவனையாளன்

## பொறுமை காக்க அமெரிக்கா அறிவுரை

இலங்கை அரசாங்கம் தொடர்ந்து பொறுமை காக்க வேண்டும் என்று அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது. அமெரிக்காவின் தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமைச்சின் செயலாளர் ரிச்சர் பௌச்சர் இதுபற்றிக் கூறியுள்ளதாவது: இலங்கை கடற்படையினர் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் குறித்து கவலை கொள்கிறோம்.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படுகிற இந்த வன்முறைகளால் இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் இலங்கை அரசாங்கம் இத்தகைய ஆத்திரமூட்டும் செயற்பாடுகளுக்கு முகம் கொடுத்து தொடர்ந்து பொறுமை காக்க வேண்டுகிறோம். (க)







நேற்றுமுன்தினம் இரவு திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியிலுள்ள சர்வதேச மாணவர் பேரவைக்குள் புகுந்த இனந்தெரியாத கும்பலொன்றினால் அங்கிருந்த பொருட்கள் அடித்து நொருக்கப்பட்டதுடன் ஆவணங்களும் எரியூட்டப்பட்டன. எரியுண்ட கட்டடத்தையும் எரியூட்டலின் பின் எஞ்சிய எச்சங்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சதீஸ்)

அமைதிக்கு உழைப்பதே உலகிற்கு நாம் செய்யும் கடமையாகும். சமாதான முழக்கங்களை வெறுமனே கூறிக்கொண்டிராமல் அமைதிக்காக தீவிரமாக பாடுபட்டால்தான் வருங்கால உலகம் பாதுகாக்கப் படும். -டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# உலகமே ஏன் இந்த பாராமுகம் உனக்கு?

யுத்தநிறுத்த உடன்படிக்கை காலாவதியாகிப் போனது. யுத்தம் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஆரம்பமாகிவிட்டது.

எனினும் நோர்வேயின் அனுசரணைப் பணியை நம்பிய தமிழ் மக்கள் தங்களின் உயிர்ப் பாதுகாப்பிற்கு எந்த உத்தரவாதமும் இல்லாமல் ஏங்கித் தவிக்கின்றனர். ஓ! உலகமே ஏன் உனக்கு இந்தப் பாராமுகம்! தமிழர்கள் அப்படி என்னதான் உனக்கு கெடுதல் செய்தார்கள்?.

கடந்த 30 ஆண்டுகளாக இலங்கைத் தீவில் தமிழர்கள் படும்பாடுபோதாதா? தார்மீகத்தையும், ஜனநாயகத்தையும் மனித உரிமைகளைப் பற்றியும் உரத்துக் கத்தும் உனக்கு ஈழத்தமிழர்கள் விடயத்தில் மட்டும் ஏன் அவை ஞாபகம் வரவில்லை?.

ஒரு நாடு இரண்டு இனம். இனத்தின் தொகையில் பிரிபட்டு நிற்கின்றது. பெரும்பான்மை என்ற பெயரால் சிறுபான்மை இனம் நசுக்கப்படுகிறது.

இதுவா உலக நீதி! ஒரு நாட்டில் இரண்டு நீதி இருக்க முடியுமா? பெரும்பான்மைக்கு ஒரு நீதி; சிறுபான்மைக்கு இன்னொரு நீதி என்றால் சிறுபான்மையினம் பெரும்பான்மையினத்துடன் சேர்ந்து வாழ்வது எவ்வகையில் சாத்தியமாகும்?.

பரவாயில்லை. இந்த நாட்டில் நாம் கூடி வாழலாமே என்றால் அதற்கும்தான் வழி இருக்கின்றதா? சமாதானம் வேண்டாம்; விடுதலைப்புலிகளுடன் பேசக்கூடாது; நோர்வேயே வெளியேறு என்ற கோரிக்கைகள் ஆளும் தரப்பிலிருந்து ஒலிக்கிறது.இருந்தும் எல்லாவற்றையும் மறந்து பேசுவோமேயென்றால் எதைத் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது?.

எந்தத் தீர்வையுமே ஆளும் தரப்பு தரமாட்டாது. பேச்சுவார்த்தை மேசையில் வெறும் கையுடன் வந்து பேசுவது என்பது நேரத்தையும் காலத்தையும் வீணாக்குவது மட்டுமன்றி தமிழ்மக்களின் வேதனையையும் மேலும் அதிகரிப்பதாகவே இருக்கும்.

ஒரு முறை இலங்கைப் பாராளுமன்றத்தில் இடைக்காலத் தீர்வுத்திட்ட வரைபு சமர்ப்பிக்கப்பட்ட போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்தவர்கள் திட்ட வரைபை தீயிட்டுக் கொளுத்தினர்.அன்று இடைக்காலத் தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றம் அங்கீகரித்திருந்தால் நோர்வேயின் சமாதானப்பணி தேவையற்றதாக இருந்திருக்கும்.

ஆனால்; அதுதான் சாத்தியமற்றுப்போயிற்றே. மெல்லவும் விழுங்கவும் முடியாமல் இருக்கக்கூடிய ஒரு அரசுடன் சேர்ந்து வாழுங்கள். கூடி வாழுங்கள் என சர்வதேச சமூகம் கருதுமாயின் -கட்டளையிடுமாயின் தமிழர்களின் பிரச்சினைகளை அந்தச் சமூகம் ஒழுங்காக விளங்கிக் கொள்ளவில்லை என்பதே அதன் பொருளாகும்.

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடும் உலக நாடுகள் யுத்தம் வெடித்துக் கொண்டிருக்கும் இச் சூழ்நிலையில் மௌனம் சாதிப்பது ஆச்சரியத்திற்குரியதுதான்.

அதாவது யுத்த நிறுத்த உடன்படிக்கை செம்மையாக அமுலில் இருந்த காலத்தில் அந்தரப்பட்ட உலகம் இப்போது மட்டும் பேசா மடந்தையாக இருப்பது எதற்காக? ஓ! உலகமே உன்னுடைய ஒப்பற்ற நீதியை துன்பப்படும் ஈழத்தமிழருக்கும் கொஞ்சமேனும் தெளித் தருளும். அது உமது கட்டாய கடமையாகும்.

இல்லையேல் இலங்கைத் திருநாட்டில் மிகப் பெரும் யுத்தம் வெடிப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும். அப்படியானதோர் அவலநிலை ஏற்பட்டால் மனிதர்களின் அழிவுகள் மலிந்து விடும். அந்த அழிவிற்கு உல கின் உதாசீனமும் ஒரு காரணம் என்பது கண்டறியப்பட்ட உண்மையாக இருக்கும்.

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்பதே வன்முறைகள் குறைவதற்கு ஒரே வழி;

## ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு செயற்படுவதே தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வன்முறைகளை கட்டுப்படுத்தக் கூடிய வழியாகுமென ஐக்கிய தேசிக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் அமெரிக்க கல்வி மையத்திற்கு விஜயம் செய்தார். அங்கு அவர் பத்திரிகையாளர்களிடம் கருத்துத்தெரிவிக்கையில்,

இலங்கையின் சமாதானத் தீர்வுக்கு பேச்சுவார்த்தைகளைத் தவிர வேறுவழியில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவை தொடர்பாக எந்தவொரு விமர்சனங்களையும் முன்வைக்கவில்லையென இன்டிப்பென்டன் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

மேலும் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பான விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள மறுத்த ரணில் விக்கிமரசிங்க உரிய காரணங்களின் அடிப்படையிலேயே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதை சுட்டிக்காட்டியதாக அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கின்ற நிகழ்விற்கு வந்திருந்தோர் இலங்கையின் சமாதானத்திற்கு உதவமுடியும் என்ற கருத்தை வெளியிட்டதாக இன்டிப்பென்டன் இணையத்தளணம் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# தமிழ் இளைஞர்களின் கொலையுடன் ஜிகாத் குழுவுக்குத் தொடர்பு

(திருகோணமலை)

திருமலை மூதூரில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதற்கு ஜிகாத் குழுவும் இராணுவமும் காரணம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் குற்றம் சாட்டியுள்ளார்.

மூதூர் இளைஞர்கள் படுகொலை தொடர்பாக திருமலை கண்கா ணிப்புக் குழுவிடம் பதிவு செய்துள்ள முறைப்பாட்டில் எழிலன் இதைத் தெரிவித்துள்ளார்.

மூதூர் இளைஞர் சுரேந்திரன் படுகொலையில் தொடர்புடைய இரு ஜிகாத் குழு உறுப்பினர்களது பெயரையும் அம் முறைப்பாட்டில் எழிலன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே மோதலை உருவாக்கும் வகையில் ஜிகாத் குழுவை இராணுவம் பயன்படுத்துவதாகவும் எழிலன் குற்றம்சாட்டியுள்ளார். (சு-5)

# வங்கிகள் மூலம் ஓய்வூதியம் — வழங்கும் நடவடிக்கை விஸ்தரிப்பு

(கொழும்பு)

ஓய்வூதியங்களை வங்கிகள் மூலம் வழங்கும் நடவடிக்கை விஸ்தரிக்கப்படுமென்று ஓய்வூதியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்த சில நாட்களில் ஓய்வூதியம் பெறுவோர் ஹற்றன் நஷனல் வங்கி, சம்பத் வங்கி, செலான் வங்கி, கொமர்ஷல் வங்கி, நஷனல் பிரன் வங்கி என்பவற்றின் மூலம் தங்களது ஓய்வூதியத்தைப் பெறமுடியும்

ஓய்வூதியம் பெறுவோர் தங்களது பேரில் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலம் ஓய்வூதியத்தை நேரடியாக அந்தக் கணக்கில் பெறமுடியுமென்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# புத்தரின் பெயரால் தமிழர்கள் படுகொலை; தமிழர் மனித உரிமை மையம் கண்டனம்

(கிளிநொச்சி)

இலங்கைத் தீவில் புத்தரின் பெயராலும், பொறுமையின் பெயராலும் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதாகவும் இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்ததிலிருந்து பதவியிலிருந்த பிரதமர் , ஜனாதிபதி ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் கிழக்கு மாகாணம் சிங்கள மயப்படுத்தப்பட்டு வருவதாகவும் பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அறிக்கை ஒன்றையும் அந்த மையம் வெளியிட்டுள் ளது.

அதன் முழு வடிவமும் வருமாறு,

இலங்கைத்தீவில் புத்தரின் பெயராலும் பொறுமையின் பெயராலும் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதுடன் இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்ததிலிருந்து பதவியிலிருந்த பிரதமர் ,ஜனாதிபதி ஆகியோரின் மேற் பார்வையின் கீழ் கிழக்கு மாகணம் சிங்கள மயப்படுத்தப் பட்டு வருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதியாகப் பொறுப்பு ஏற்று தற்பொழுது ஏறக்குறைய ஐந்து மாதங்களாகிவிட்டது. ஆனால் இன்றுவரையில் இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையின் சமாதான தீர்வுக்கோ, பேச்சுவார்த்தைக்கோ எந்தவித ஆக்கபூர்வமான முயற்சிகளும் மஹிந்த ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்படவில்லை.

அண்மைக் காலங்களில் சர்வதேச சமுதாயத்தையும் பௌத்த நாடுகளையும் வசீகரப்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் ஓர் புத்த சமயத்தவனாகவும் பொறுமைசாலியாகவும் காட்டுவதற்கு முயற்சித்தார். ஆனால் இவரது ஐந்து மாத பதவிக்காலங்களில் முன்னூறுக்கு மேற்பட்ட அப்பாவி தமிழ்மக்கள் வடக்கு-கிழக்கில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவரது ஜனாதிபதி காலத்தில் படுகொலை செய்யப்பட்டோரின் பட்டியலும் தமிழர் மனித உரிமைகள் மையத்தினரினால் அண்மையில் வெளியிடப் பட்டது. இப் பட்டியலில் புத்திஜீவிகள், கல்விமான்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள் , பத்திரிகையாளர்கள் ,வர்த்தகர்கள் உட்பட பலர் அடங்குவர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறும் புத்தசமயமும் சகிப்புத் தன்மையும் உயிர்களைக் கொல்வதை அனுமதிக்கின்றனவா? என்பதை அமைப்பின் சார்பில் இங்கு கேட்கவிரும்புகின்றோம். புத்த சமயத்தவர் சகிப்புத்தன்மை கொண்டவர் எனக்கூறும் ஜனாதிபதிதான், நான்கு வருட கால யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி ஏப்ரல் 25ஆம் திகதி தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்து திருகோணமலையில் உள்ள அப்பாவித் தமிழ் மக்கள் மீது கடல் , தரை ஆகாய, தாக்குதல்களை நடத்தினார். அத்துடன் திட்டமிடப்பட்டு திருகோணமலையில் இருந்து தமிழ் மக்களை பலாத்காரமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள். புலிகள் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடந்துகொள்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் அகற்றப்பட்டு ஓர் இனச் சுத்திகரிப்பு நடைபெறுவதை பல நிறுவனங்களால் நல்ல முறையில் ஆவணம் செய்துள்ளன.


அண்மைக் காலங்களில் சர்வதே சமுதாயத்தினர் கிழக்கில் நடைபெறும் இனச் சுத்திகரிப்பை நேரில் பார்வையிட்டுள்ளனர். இந்த ரீதியில் இனச் சுத்திகரிப்பை மேற்கொள்ளும் கிரிமினல் குற்றவாளிகளை விசாரிப்பதற்கும் ந டவடிக்கை எடுக்கவும் தண்டனை வழங்கவும் உரிமை கொண்ட ஐக்கிய நாடுகள் சபை, உடனடியாக இலங்கையில் இனச் சுத்திகரிப்புக்கு ஆளாக்கப்படும் தமிழ் மக்களின் அவலத்தை நீக்கி உடன் அது தொடர்பான விசாரணைகளை நடத்தி இனச் சுத்திகரிப்பை நடத்த உத்தரவிட்டவர்களை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈடும் வழங்க முன்வரவேண்டும்.

தமிழர் மனித உரிமைகள் மையத்தினரால் வெளியிடப் பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (கு)

# அனுதாபம்

நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் கண்காணிப்புக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட ட்ரொன் புறூவ் ஹெவ்டே இலங்கை மக்களின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றியதை கௌரவத்துடன் நினைவு கூர்வதாக ஈழ மக்கள் ஜனநாயக்கட்சி அன்னாரின் மறைவு குறித்து வெளியிட்ட அனுதாபச் செய்தியில் வெளியிட்டுள்ளது. (கு)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



அடக்கம் என்பதில் சொல், செயல், சிந்தனைகளில் அடக்கம் என்பது அடங்கியுள்ளது. இவ்விதம் முக்கரணங்களில் அடக்கம் உள்ளவன் தெய்வநிலைக்கு உயர்கிறான். இத்தகைய அடக்கம் இல்லாதவனின் வாழ்க்கை அவனை நரகத்திற்கே இழுத்துச் செல்லும்.

சுவாமி விவேகானந்தர்







தமிழக முதலமைச்சராக தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி நேற்று பதவிப்பிரமாணம் செய்தார். அப்போது எடுக்கப்பட்ட காட்சிகளில் சிலவற்றை இங்கே காணலாம்.

## வெட்டுக்காயத்துடன் குடும்பஸ்தர் மீட்பு

(துன்னாலை)

வடமராட்சி மாலுசந்தி தெருமூடி மடப் பகுதியில் நேற்று மாலை 6.20 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டுக்கரயங்களுடன் மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட இவரை இராணுவத்தினர் மந்திகை மருத்துவமனையில் அனுமதித்ததாக தெரிவிக்கப்பட்டது.

தும்பளை கிழக்கைச் சேர்ந்த சலவைத் தொழிலாளியான கந்தையா சிவபாதசுந்தரம் (வயது 41) என்பவரே வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டவராவார். இவர் பகுதி நேர ஓட்டோச் சாரதி எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-10)

## வெற்றிலைக்கேணி தாக்குதலுக்கு ஐரோ.ஒன்றியம் கடும் கண்டனம்

வெற்றிலைக்கேணிப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கடற்படைக் கலங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவமானது சமாதான முயற்சிகளை பின்தள்ளும் நடவடிக்கை ஆகுமென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது ஒரு பாரிய போர்நிறுத்த உடன்பாட்டு மீறல் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. இதேவேளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கையின்படி கடலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைக்கு இடமில்லை என்ற கருத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் கோடிட்டுக் காட்டியுள்ளது.

அதேவேளை போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் அறிக்கையைக் கண்டித்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமது தாயகப்பகுதியில் ,கடற்பகுதியில் நடமாடும் பூரண உரிமை தமக்கு உண்டு என்று தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

## வழக்குத் தாக்கல்

வவுனியா வைத்தியசாலையில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண் போராளி ஒருவரை கடத்திச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர் மீது விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். இதற்காக அவர்கள் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாகவே கைதுசெய்யப்பட்டவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்திலா அல்லது வவுனியா மேல் நீதிமன்றத்திலா வழக்குத்தாக்கல் செய்வதென்பது குறித்து முடிவெடுக்கப்படவுள்ளது. (க-9)

## கிரனைட் தாக்குதலில் இரு சிப்பாய்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மித்த பகுதியில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றிரவு 7 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை இச் சம்பவத்தினையடுத்து இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலாலி வீதி தபாற்பெட்டி வீதியில் உள்ள என்.சடாச்சரம் (வயது 59) என்ற வயோதிபர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## மெய்வல்லுநர் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மெய்வல்லுநர் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ்.மாவட்ட பாடசாலை விளையாட்டுக்குழுவின் செயலாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார். (க-9)

## ஜனாதிபதி மகிந்தவுடன் ஈழவேந்தன் எம்.பி.பேச்சு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகள் தொடர்பாக ,யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

சுமார் 15 நிமிட நேரம் இவ் உரையாடல் இடம் பெற்றுள்ளது. சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இராணுவத்தினரால் எரிக்கப்பட்டமை தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு வருகின்றமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஈழவேந்தனால் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை மாணவர் பேரவை அலுவலகம் தாக்கப்பட்டமை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என ஜனாதிபதி தெரிவித்ததுடன் வெற்றிலைக்கேணியில் இடம்பெற்ற தாக்குதலுக்கு கண்டனத்தை தெரிவித்ததாகவும் ஈழவேந்தன் எம்.பி.தெரிவித்தார். (ச-5)

## படையினரின் தீவிர சோதனை

அல்லைப்பிட்டி சோதனைச்சாவடி மற்றும் குறிகாட்டுவான் துறைமுக வீதியால் செல்லும் பயணிகள் படையினரால் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. இதேவேளை குறித்த வீதியால் செல்லும் வாகனங்களும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாகவும் கூறப்படுகிறது. (க)

## பிறப்பு இறப்பு பதிவுகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

பிறப்பு ,இறப்பு பதிவுகளை செய்வதற்கு தற்போது அறவிடப்படும் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பதிவாளர் திணைக்களம் ஆலோசித்து வருகின்றது.

நாடு முழுவதிலும் இருக்கின்ற பிறப்பு இறப்பு பதிவாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு நீண்ட காலமாக அதிகரிக்கப்படாததன் காரணமாகவே இது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாக பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பிறப்பு இறப்பு பதிவுகளுக்காக தற்போது 10 ரூபா அறவிடப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். இந்தக் கட்டணத்தை 25 ரூபா வரை அதிகரிக்க எண்ணியுள்ளதாகவும் இது தொடர்பான பத்திரம் ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## யாழ்ப்பாணத்தை...

கொள்வதற்காக விசாரணைகள் நடை பெற்று வருவதாகவும்,

இவர்களை அம்பாந்தோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-9,05)




## மாணவர் பேரவை...

யிட்டிருந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி பகல் எமது அலுவலகத்திற்குள் படையினர் முகங்களை கறுப்புத் துணியால் மூடிக்கட்டியவாறு உள் நுழைந்து தாக்கியமை தெரிந்ததே என மாணவர் பேரவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி பகல் எமது அலுவலகத்திற்குள் படையினர் முகங்களை கறுப்புத்துணிகளால் மூடிக்கட்டியவாறு உள் நுழைந்து தாக்கியதில் பல மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இவை தொடர்பாக நாம் நேரிலும் எழுத்து மூலமாகவும் கண்காணிப்புக்குழுவிற்கு தெரிவித்த போதும் எதுவித நடவடிக்கையும் எடுக்க கண்காணிப்புக்குழு தவறிவிட்டது.

எனவே இது தொடர்பாக விசாரித்து உரிய படையினரை சட்டத்தின் முன் நிறுத்தி நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துத் தரப்பையும் கேட்டுக்கொள்கிறோம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச் சம்பவத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (ச-05,15,133)

## க.கா.குழுவின்...

கடற்படையினரின் படகுகளில் பயணம் செய்வதனை தவிர்க்குமாறு விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவிற்கு நேற்று முன்தினம் கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

எதிர்காலத்தில் கடற்படையின் படகுகளில் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் பயணம் செய்யும் போது ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களுக்கு தாம் பொறுப்பேற்க முடியாதென்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அக்கடிதத்தில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இரு தரப்பு மோதல்களை தவிர்க்கும் பொருட்டு கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் காகிதத்தில் காப்பாற்றப்பட்டு வருகின்ற போதும் அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் உக்கிரமற்ற ஒரு போர் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

றொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கையில் உக்கிரமற்ற தணிவான ஒரு போர் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. அதனை போர் என்று சொல்வதில் தப்பில்லை என்று கூறியுள்ளார்.

வெற்றிலைக் கேணித்தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகள் கண்காணிப்புக்குழுவிற்கு அனுப்பியுள்ள கடிதம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் , கடற்படையினரின் கடற்கலங்களில் பயணம் செய்யவேண்டாம் என்று விடுதலைப்புலிகள் அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் நான் எனது முடிவைத் தான் எடுப்பேன்.

அவர்கள் விடுத்த எச்சரிக்கை கடுமையானதோ இல்லையோ கடற்படைக் கப்பல் மீதான அவர்களது தாக்குதல் அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என்று கூறியுள்ளார்.

இதனிடையே வடக்கு கிழக்கிலும் அதற்கு வெளியிலும் இடம்பெற்றுவரும் தமிழ் மக்கள் மீதான படுகொலைச் சம்பவங்களில் படையினரின் பங்களிப்பு உள்ளதாக தாம் உணர்வதாகவும் கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். (ச-05)

ராஜா சினிமா யாழ்ப்பாணம்
04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பீறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 14.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.